செய்தி வெளியீடு எண்: 162 நாள் : 16.03.2016

**தேர்தல் விதிமீறல் – பொது சொத்துக்கு சேதம் விளைவித்ததாக 1.34 லட்சம் புகார்களும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தாக 37,141 புகார்களும் 16.03.2016 வரை பெறப்பட்டன.**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ளதால் தேர்தல் நன்னடத்தை விதி அமலில் உள்ளது. உரிய ஆவணங்கள் இல்லாததால், திருப்பூர் மாவட்டத்தில் ரூ.2 லட்சம், நீலகிரி மாவட்டத்தில் ரூ3.31 லட்சம், திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.69,600/– திருச்சி மாவட்டத்தில் ரூ.1 லட்சம், கோவை மாநகரில் ரூ.1.06 லட்சம், நெல்லையில் ரூ.4.23 லட்சம், கிருஷ்ணகிரியில் ரூ.12.80 லட்சம், மதுரை மாநகராட்சிப் பகுதியில் ரூ.6 லட்சம் மற்றும் 33,375 மி.லி மதுவகைககள், விருதுநகர் மாவட்டத்தில் ரூ.90 ஆயிரம் என ரூ.32 லட்சம் பறக்கும் படையினரால் 14.03.2016 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தேர்தல் நன்னடத்தை விதி அமலில் வந்ததிலிருந்து 14.03.2016 வரை ரூ.2.57 கோடி பறிமுதல் செய்யப்பட்டு பறக்கும் படையினரால் 84 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

உரிய அனுமதி ஏதும் இல்லாமல் சென்னை, கோவை பகுதிகளில் சுவற்றில் போஸ்டர் ஒட்டியது, அரசியல் தலைவர் படங்கள், கட்சி சின்னம் ஆகியவற்றை பார்வைக்கு வைத்தது, அரசியல் கொடியினை பொது இடங்களில் வைத்தது, ஆகியவற்றிற்காக உரிய அரசியல் கட்சி பிரமுகர்கள் மீது காவல் துறை மூலம் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நிலையான கண்காணிப்புக் குழுவினரால் (Static Surveillance Team) விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.60 ஆயிரம், கடலூர் மாவட்டத்தில் ரூ.1.94 லட்சம், திருப்பூர் மாவட்டத்தில் ரூ.95 ஆயிரம், பொள்ளாச்சியில் ரூ.2.90 லட்சம், திருச்சி மாநகரில் ரூ.1.68 லட்சம், திண்டுக்கல் பகுதியில் ரூ.60 ஆயிரம், தர்மபுரியில் ரூ.50 ஆயிரம், திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.2 லட்சம் என ரூ.11.18 லட்சம் 14.03.2016 அன்று பறிமுதல் ஆனது. 14.03.2016 வரை ரூ.5,26,18,196/– இக்குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களிலும் சுவற்றில் எழுதி பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தாக 41,089 புகார்களும் போஸ்டர் தொடர்பாக 57412 புகார்களும் பேனர் தொடர்பாக 16,755 புகார்களும் இதர வகையில் 18,968 புகார்களும் ஆக மொத்தம் 1,34,224 புகார்கள் பெறப்பட்டன. 75,095 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சுவற்றில் எழுதிய வாசகங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. மேலும் தனியார் இடங்களில் சுவற்றில் எழுதியதாக 16,360 புகார்களும், பேனர் வைத்தாக 2,523 புகார்களும் இதர வகையில் 2,199 புகார்களும் பெறப்பட்டன. சுவற்றில் எழுதுதல், போஸ்டர் ஒட்டுதல், பேனர் வைத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டவர்கள்மீது தேர்தல் நேரத்தில் பொது சொத்துக்கு சேதம் விளைவித்தாக 16.03.2016 வரை 384 வழக்குகளும், தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தாக 187 வழக்குகளும் பறக்கும்படை, கண்காணிப்புக் குழுவினரால் பதிவு செய்யப்பட்டன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**